08.04.2026

OS No: 548/2019

பி.வா.சா.1 - தேவி க/பெ. மணியரசன்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் படித்துள்ளேன். எழுதப் படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தானது கண்டரமாணிக்கம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து நான் கிரையம் வாங்கிய சொத்தா என்றால் ஆமாம். மேற்படி கிரையமானது பத்திர அலுவலகத்தில் கிரையப் பத்திரம் பதிவு செய்து ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா வழக்கு எதற்கு போடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் வாதிக்கு நான் பணம் தர வேண்டும் என்பதற்காக போடப்பட்டுள்ளது. தாவா சொத்தை வாதிக்கு நான் கிரையம் செய்திட வேண்டும் என்பதற்காக வாதி வழக்கு போட்டுள்ளாரா என்றால் நான் தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்திட நினைத்தது இல்லை. வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்பதற்காக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் CRP(MD) No. 473/2022 என்ற வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் செய்தேன். மேற்படி வழக்கை நான் மேல் நடத்தாமல் திரும்ப பெற்றுக் கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்திட வேண்டி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தை வாதிக்கு நான் கிரையம் பதிந்து தர கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. எனது கணவருக்காக OS.No.120/2017 வழக்கை நான் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். வாதியை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக வழக்கை நான் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் உள்ள எனது கையெழுத்தை மறுத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய தொகையில் 80 % வரை நான் பெற்றுக் கொண்டுவிட்டேன் என்றும், அதனால் மீதி கிரைய தொகையை வாதியிடம் பெற்றுக் கொண்டு தாவா சொத்தை வாதிக்கு நான் பதிந்து தர வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.08 16:53:09 +0530